# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## TROP.26/2022

PW3– பெரியசாமி நாள்.27.01.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத்து கூட்டி படிக்க முடியும். எனக்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியும். வீட்டை ஈடுவைத்து பணம் வாங்கியதாக வழக்கு போட்டுள்ளார்கள். பாப்பாத்தியம்மாளிடம் வசந்தா பணம் வாங்கியுள்ளார். 24.11.2015ல் ஈடுபத்திரம் எழுதப்பட்டது. அன்று பணம் தரவில்லை, வீட்டிற்கு வாருங்கள் தருகிறோம் என்று சொன்னார்கள். ஒருவாரம் கழித்து பணம் கொடுத்தார்கள். பாப்பாத்தியம்மாள் வீட்டில் வைத்து ரூ.5லட்சம் பணம் கொடுத்தார்கள். அப்போது நான், எனது தம்பி, என்மனைவி மற்றும் கடன் கொடுத்தவர் இருந்தார்கள். பத்திரத்தை ஒரு ஐயர் எழுதினார். செட்டிக்குளம் பத்திர ஆபிசில் வைத்து எழுதினார். பத்திரஅலுவலகத்திற்கு நான், என்தம்பி, என்மனைவி, என்பெரியம்மா மகன் நாரயணன் மற்றும் சாட்சி செந்தில்குமார் போயிருந்தோம். கலையரசனும் வந்திருந்தார். பத்திரத்தில் என்மனைவி கையெழுத்து போட்டார். சாட்சியாக செந்தில்குமார், கலையரசன் போட்டார்கள். பத்திரத்தில் உள்ள விவரங்கள் எழுத்துகூட்டி படித்தத்தில் ஓரளவுக்கு தெரியும். பத்திரம் எழுதுவதற்கு நாங்கள் விவரம் சொல்லவில்லை. ஐயராக எழுதிகொண்டார். நாங்கள் பத்திரம் வாங்கவில்லை. பத்திரத்தை ஐயர் வாங்கினாரா அல்லது பாப்பாத்தியம்மாள் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. பத்திரத்தை படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள், முக்கியமான விவரத்தை படித்து காண்பிக்கவில்லை, எனக்கு புரியவில்லை. 3 வழக்கு வட்டியுடன் கட்டவேண்டும், இல்லையென்றால் கோர்ட்டு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தை படித்துகாண்பிக்கவில்லை. பத்திரஆபிஸ் அலுவலரிடம் எனக்கு பத்திர விவரம் புரியவில்லை என்று சொல்லவில்லை. கூடவந்த கலையரசன் மற்றும் செந்தில்குமாரிடம் இதுபற்றி கேட்டேனா என்றால் இப்படி

எழுதுவது தான் வழக்கம் என்றும், பணம் கட்டினால் கேன்சல் செய்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். 24.11.2015ம் தேதி பத்திர ஆபிஸ் போனோம். நாங்கள் பத்திரம் எழுதி சுமார் ஒருவாரம் கழித்து தான் பணம் வாங்கினோம் என்ற விவரம் செந்தில்குமார் மற்றும் கலையரசனுக்கு தெரியும். ஒருவாரம் கழித்து தான் பணம் வாங்கினோம் என்ற விவரத்தை எதிர்வழக்குரையிலும், நாங்கள் தாக்கல் செய்த மனுவிலும் கூறியுள்ளோம். 2015 டிசம்பர் மாதம் முதல் 2017 மே மாதம் வரை வட்டி கொடுத்துள்ளோம். வட்டிகொடுத்ததை எழுதிவாங்கவில்லை இருவரும் உள்ளூர் என்பதால் நம்பிக்கையில் எழுதிவாங்கவில்லை. கொஞ்சகொஞ்சமாக வட்டி கொடுத்தேன். பாப்பாத்தியம்மாளிடம் வட்டி கொடுத்தேன். எவ்வளவு வட்டிகொடுத்தோம் என்றால் ரூ.30,000/-ஆக 5, 6 முறை கொடுத்தோம். வட்டிகொடுத்த விவரத்தை கலையரசன் மற்றும் செந்தில்குமாரிடம் சொன்னேனா என்றால் அவர் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஆகிவிட்டதால் அவரை பலமுறை பார்க்கசென்று சொல்லமுடியவில்லை. செந்தில்குமாரிடம் சொல்லியுள்ளேன். பத்திரத்தில் ரூ.6லட்சம் என்று எழுதப்பட்ட விவரம் எங்களுக்கு எப்போது தெரியும் என்றால் சுமார் ஒருவருடம் கழித்து என்மகன் தனராஜ் படித்து பார்த்து சொன்னார். அந்த விவரத்தை எதிர்வழக்குரையிலும், மனுவிலும் சொல்லவில்லை. வட்டிகொடுத்த விவரத்திற்கு ரசீது கொடுக்கவில்லை என்று நடவடிக்கை எடுத்தோமோ என்றால் TVS டோல்கேட்டில் உள்ள ஐ.ஜி ஆபிசில் புகார் கொடுத்தோம். அந்த புகாரின் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவதுபோன்று தாவா கடனுக்கு வட்டி எதுவும் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஈட்டுகடன் பத்திரம் எழுதியஅன்றே ரூ.6லட்சம் கடன் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. பிளாட் விற்றது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கேமாரா பதிவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்மனைவிக்கு ஆதரவாக அவர் கூறியுள்ள சங்கதிகளை

அப்படியே என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கூறி உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.